**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066947

1. District : மாவட்டம் கடலூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 9/2019 | Date: நாள் 16.07.2019

2. (i) Act சட்டம்: Criminal Procedure Code, 1973 — Sections பிரிவுகள்: 102

   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 15.07.2019 18.20 hrs
   Date to : நாள் வரை 15.07.2019 22.00 hrs

   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.07.2019
   Time : நேரம் 1630 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III
   Time : நேரம் 1630 hrs

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 50 கி.மீ. தெற்கு

   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி 1 எண் இணை சார் பதிவாளர் அலுவலகம், சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --------------
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. அமுதா
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் உதவி ஆய்வுக்குழு அலுவலர்
   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   R.மணிவண்ணன், வயது 36, த/பெ ராஜமாணிக்கம், சார்பதிவாளர், 1 எண் இணை சார்பதிவகம், சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்).

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

இன்று 16.07.2019 ந்தேதி மாலை 16.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, நாள் : 16.07.2019, அனுப்புநர், அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – 1 எண் இணை சார் பதிவாளர் அலுவலகம், சிதம்பரம், சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி – பத்திரப்பதிவு நடவடிக்கைக்காக லஞ்சமாக

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/7/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16-07-2019 1700 hrs.

Name: பெயர் E.S.T. ...........
Rank: நிலை DSP ............No. எண் ..........
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு,
கடலூர்.

பெறப்பட்டிருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாவட்டம், சிதம்பரம் 1 எண் இணை சார் பதிவக அலுவலகம், சிதம்பரத்தில் உள்ள அலுவலகத்தில் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் 15.07.2019 சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவகம், சார்பதிவாளர், திரு. R.மணிவண்ணன் என்பவரை சந்தித்து பத்திர பதிவு ஆவணங்கள் பதிவு செய்வதற்காகவும் மற்றும் இதர பதிவுகளுக்காகவும் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லஞ்சமாக பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் எனது அலுவலகத்திலிருந்து புறப்பட்டு, மாவட்ட ஆட்சியர், கடலூர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மாலை சுமார் 4.00 மணிக்கு நேரில் வந்து அங்கு பணியில் இருந்த துணை காவல் கண்காணிப்பாளர், திரு.E.S.J.மெல்வின் ராஜாசிங் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவகம் அலுவலகத்திற்கு மாலை சுமார் 5.30 மணியளவில் சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவகத்தில் பத்திர பதிவிற்கு லஞ்சமாக கொடுத்துள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், துணை காவல் கண்காணிப்பாளர், திரு.E.S.J.மெல்வின் ராஜாசிங் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை 4.15 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு சிதம்பரம் லால்கான் தெருவில், தெற்கு பார்த்து அமைந்துள்ள சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 5.45 மணிக்கு சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது அங்கிருந்த பொதுமக்கள் பதற்றத்துடன் சார்பதிவாளர் அலுவலகத்தைவிட்டு வெளியேற முயன்றவர்களை தடுத்து நிறுத்தி விசாரித்தபோது, அவர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காகவும் மற்றும் இதர அலுவலாகவும் 1 எண் இணை சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார்கள். பின்னர், துணை காவல் கண்காணிப்பாளர், அவர்களை

அலுவலகத்தின் முன்புறமுள்ள வராண்டாவில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த நபருக்கு பின்புற சுவற்றில் 1 எண் இணை சார்பதிவாளர் என ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்ததை கவனித்தோம். அந்த நபரிடம் என்னையும், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தனது பெயர் R.மணிவண்ணன், வயது 36, த/பெ ராஜமாணிக்கம், சார்பதிவாளர், சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவகம் என்றும், தான் ஆகஸ்ட் 2018 முதல் சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவகத்தில், சார்பதிவாளராக பணிபுரிந்துவருவதாகவும், தான் T.புத்தூர் கிராமம், T.நெடுஞ்சேரி அஞ்சல், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, சார்பதிவாளர் திரு.மணிவண்ணன் அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேற்படி சிதம்பரம் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகமானது கிழக்கு மேற்காக செல்லும் லால்கான் தெருவிற்கு வடக்குபுறமாக சுற்றுசுவற்றுடன் அமைக்கப்பட்டுள்ளது. இது அரசு கட்டிடமாகும். இவ்வளாகத்தின் கிழக்குபுறம் மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அலுவலகமும், இவ்வளாகத்தின் மேற்குபுறம் மாவட்ட பதிவாளர் (தணிக்கை) அலுவலகமும், அமைந்துள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகம், தெற்குபுறமாக பிரதான வாயிற்படி அமைக்கப்பட்டுள்ளது. வாயிற்படிக்கு வடக்குபுறம் சுமார் 25 அடி நீளமும், 15 அடி அகலமும் கொண்ட மெயின் ஹால் உள்ளது. மேற்படி மெயின் ஹாலின் நடுவில் கிழக்கு பார்த்து திசையில் 1 எண் இணை சார் பதிவாளர் மரத்தாலான மேடை அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி மேடைக்கு மேற்குபுறம் சுமார் 15அடி நீளம் 15 அடி அகலம் கொண்ட கண்ணாடி தடுப்பு மற்றும் கதவு கொண்ட கணினி அறை அமைக்கப்பட்டுள்ளது. மெயின் ஹாலுக்கு வடக்குபுறமாக சுமார் 35 அடி நீளம் 15 அடி அகலம் கொண்ட பதிவுரு அறை அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் நான், துணை காவல் கண்காணிப்பாளர், சார்பதிவாளர் மணிவண்ணன் மற்றும் காவல் குழுவினருடன் அலுவலக ஹாலில் 1) சார்பதிவாளர் அலுவலகத்தில், சார்பதிவாளர் இருக்கைக்கு முன்னாள் அமைக்கப்பட்டிருந்த மர மேஜையில் உள்ள இடதுபுற மேல் டிராயரில் சோதனை செய்து பார்க்க வெள்ளை பேப்பருக்கு அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை

எண்ணிப்பார்க்க (1) 500 x 20 = 10,000/- பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் மணிவண்ணனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 2) பதிவுரு அறையில் தெற்கு பார்த்து அமைந்த சுமார் 6 க்கு 3 அடி அளவுள்ள முதல் மர பீரோவை சோதனையிட மேலிருந்து கீழாக நான்கு அடுக்குகள் இருந்தது. அதில் இருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்க்க மேல் அடுக்கின் ஆவணங்கள் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 2 = 4000/- (2) 500 x 2 = 1,000/- (3) 200 x 3 = 600/-, (4) 100 x 4 = 400/- (5) 50 x 4 = 200/-, (6) 20 x 5 = 100, (7) 10 x 11 = 110 ஆக மொத்தம் ரூ.6,410/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் மணிவண்ணனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 3) மேற்சொன்ன அதே மர பீரோவின் கீழ் அடுக்கின் ஆவணங்கள் இடையில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 2 = 4000/- (2) 500 x 11 = 5,500/- (3) 200 x 2 = 400, (4) 50 x 5 = 250 ஆக மொத்தம் ரூ.10,150/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் மணிவண்ணனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 4) அதே பதிவுரு அறையில் மேற்கு பார்த்து அமைந்த சுமார் 6 க்கு 3 அடி அளவுள்ள மர பீரோவை சோதனையிட மேலிருந்து கீழாக நான்கு அடுக்குகள் இருந்தது. அதில் இருந்த ஆவணங்களை சோதனை செய்து பார்க்க மேல் அடுக்கின் ஆவணங்கள் அடியில் பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 100 x 6 = 600/- (2) 10 x 12 = 120/- ஆக மொத்தம் ரூ.720/– பணம் இருந்தது. 5) அதே மர பீரோவில் இரண்டாவது அடுக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு இடையே பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 50 x 5 = 250/–, (2) 20 x 4 = 80/- (3) 10 x 9 = 90/-, ஆக மொத்தம் ரூ.420/– பணம் இருந்தது. 6) அதே மர பீரோவின் கீழ் அடுக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு இடையே பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 500 x 29 = 14,500/–, (2) 100 x 8 = 800/- ஆக மொத்தம் ரூ.15,300/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த 1 எண் இணை சார்பதிவாளர் மணிவண்ணனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடங்களில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேலும், மேற்சொன்ன சோதனையில் கைப்பற்றப்பட்ட பணத்திற்கு சரியான முகாந்திரம், சார்பதிவாளர் மணிவண்ணன்

தெரிவிக்காததால் மேற்படி பணம் மொத்தம் ரூ.43,000/– பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு நடவடிக்கைக்காகவும், இதர அலுவல் பணிகளுக்காகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் லஞ்சமாக பெறப்பட்டிருக்கலாம் என கருதி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி திடீர் ஆய்வு சோதனை மகசரில் கைப்பற்றினேன். சோதனையின் போது சார்பதிவாளர் அலுவலகத்தினுல் கேமரா ஆப்பரேட்டராக பணியில் இருந்த ஜெயராமன் (வயது 33), த/பெ.ராமதாஸ், நெ.59, யாதவர் தெரு, மணிக்கொல்லை, புவனகிரி தாலுக்கா கடலூர் மாவட்டம், மற்றும் ஸ்கேன் ஆப்பரேட்டர்களாக பணியில் இருந்த உமா (வயது 24), த/பெ. பழனிவேல், பவழக்கழை தெரு, வள்ளம்படுகை அஞ்சல், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவரும் திவ்யா (வயது 24), த/பெ.ஆறுமுகம், நெ.C,13, குமரகோயில் தெரு, சீர்காழி, நாகை மாவட்டம் ஆகியோர் பணியில் இருந்தனர். இவர்களைப் பற்றி விசாரிக்க முறையே Out sourcing அடிப்படையில் TCS மற்றும் 9 star கம்பெனியின் மூலம் ஊதியம் பெற்று பணிபுரிவதாக சொன்னார்கள். மேலும் அலுவலகத்தில் விஜி (வயது 35), க/பெ.ஜீவானந்தம், வீரானந்தபுரம் மற்றும் அஞ்சல், காட்டுமன்னார்கோயில் தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் சார் பதிவாளர் அலுவலகத்தில் Data entry operator ஆக பணிபுரிந்துவருவதாகவும், இவரை பற்றி விசாரிக்க இவர் Out sourcing அடிப்படையில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மேலும், ஹேமலதா (39), க/பெ.சங்கரன், நெ.420, சிவஜோதி நகர், சிதம்பரம், கடலூர் மாவட்டம் என்பவர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், ரவிக்குமார் (வயது 32), த/பெ. மருதை, யாதவர் தெரு, மணிக்கொல்லை அஞ்சல், புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர், இளநிலை உதவியாளராக பணிபுரிவதாகவும், அரசன், (வயது 58), த/பெ. பூங்காவனம், மேல்கவரப்பட்டு, பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், ராஜேந்திரன் (வயது 58), த/பெ. ராமசாமி, நெ.1.46, வண்டுராயன்பட்டு, ஆலிச்சிகுடி அஞ்சல், புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம் என்பவர் பதிவுரு எழுத்தராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார்கள். மேலும், அலுவலகத்தினுள் இருந்த ஒரு நபரை விசாரிக்க அவர் பெயர் S.ராஜா (எ) நடராஜன் (வயது 41), த/பெ. செல்வராஜ், நெ.26/4, வடக்கு மெயின் ரோடு, சிதம்பரம் என்ற முகவரியில் வசித்துவருவதாகவும், தான் சிதம்பரத்தில் பத்திர விற்பனையாளர் என்றும் தெரிவித்தார். அவரை மேலும் விசாரிக்க அவர் பத்திர பதிவிற்காக அலுவலக வேலை நிமித்தமாக சார் பதிவாளர் அலுவலகதிற்கு வந்ததற்கான முகாந்திரமில்லை. மேலும், 1) வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 30 வரை), 2) தாமத வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 82 வரை) 3) தனி நபர் பண இருப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 174 வரை), 4) C கணக்கு பதிவேடு (பக்கம் 1 முதல் 384 வரை),

5) கணக்கு A பதிவேடு (23.04.2019 முதல் 20.06.2019 வரிசை எண் 2201 வரை எழுதப்பட்டுள்ளது), 6) நிகழ்ச்சி குறிப்பேடு (பக்கம் 1 முதல் 288 வரை) 7) G கணக்கு பதிவேடு (பக்கம் 1 முதல் 239 வரை), 8) H கணக்கு பதிவேடு (பக்கம் 1 முதல் 380 வரை) ஆகிய பதிவேடுகள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், P6/2019 cum document No.2052/2019 released dated 11.06.2019, P9/2019, dated 24.05.2019, P10/2019, dated 30.05.2019, P11/2019, dated 06.06.2019, P13/2019, dated 03.07.2019, P14/2019, dated 09.07.2019 ஆகிய ஆவணங்கள் சார் பதிவாளர் வசம் நிலுவையில் இருந்தது ஆய்வில் தெரியவந்தது. மேற்கண்ட ஆவணங்கள் நிகழ்ச்சி குறிப்பேடு பதிவேட்டில் இன்றைய தேதியில் நிலுவையில் இருப்பதாக பதிவுகள் இருப்பதாக காணப்படவில்லை. எனவே, மேற்கண்ட 6 ஆவணங்களின் ஒளி நகல் மட்டும் சான்றொப்பத்துடன் பெறப்பட்டது. மேலும், நிகழ்ச்சி குறிப்பேடு பதிவேட்டில் நிலுவையில் இருப்பதாக காணப்படும் ஆவணங்கள் சார் பதிவாளர் வசம் இல்லை. அது பற்றி விசாரிக்க மேற்படி ஆவணங்கள் பதிவு பொதுமக்களுக்கு திரும்ப வழங்கப்பட்டுவிட்டதாக தெரிவித்தார். ஆனால் ஆவணங்கள் பதிவு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்பதற்கு சார்பதிவாளர் எந்தவித ஆதாரத்தையும் வழங்கவில்லை. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 6.20 மணி முதல் இரவு 10.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் இச்சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. மேற்கண்ட திடீர் ஆய்வு தொடர்பாக இன்று 16.07.2019ந்தேதி மாலை 16.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, நேற்று 15.07.2019ந்தேதி சிதம்பரம், 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.43,000/–, திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டு கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். Sd……A.Amutha, (அ.அமுதா), உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்,

கடலூர். அய்யா, நான் இன்று 16.07.2019 மாலை 16.30 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/2019, சட்டபிரிவு 102 குற்றவியல் நடைமுறை சட்டம், உடன் இணைந்த சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

16/7/19
DSP, V&AC
CUDDALORE.